www.ird.gov.lk www.ird.gov.lk www.ird.gov.lk

ශ්‍රී ලංකා දේශීය ආදායම්
இலங்கை உள்நாட்டு இறைவரி
Sri Lanka Inland Revenue

SET- T 2021/2022

# செலுத்தப்படற்பாலதான மதிப்பிடப்பட்ட வருமான வரிக் கூற்றை பூர்த்திசெய்வது மற்றும் காலாண்டு தவணைக் கொடுப்பனவை மேற்கொள்வது என்பவற்றுக்கான விரைவு வழிகாட்டி
## வரி மதிப்பீட்டாண்டு 2021/2022

வரி மதிப்பீட்டாண்டின் போது மதிப்பிடற்பாலதான வருமானத்தை கணிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் எந்தவொரு வரிச்செலுத்துநரும் காலாண்டுத் தவணையில் **செலுத்தப்படற்பாலதான மதிப்பிடப்பட்ட வருமான வரிக் கூற்றில்** கணிக்கப்பட்டவாறான செலுத்தப்படற்பாலதான மதிப்பிடப்பட்ட வருமானத்தில் வருமான வரியை செலுத்துதல் வேண்டும் என்பதுடன் **செலுத்தப்படற்பாலதான மதிப்பிடப்பட்ட வருமான வரிக் கூற்றினை** முதல் வரித் தவணைக் கொடுப்பனவுக்கான திகதியில், அதாவது 2021, ஆகஸ்ட் 15 அன்று சமர்ப்பிக்கத் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

### 1. பொது அறிவுறுத்தல்கள்

### 1.1 செலுத்தப்படற்பாலதான மதிப்பிடப்பட்ட வருமான வரிக் கூற்றினை சமர்ப்பித்தல்

முறையாக நிரப்பப்பட்ட செலுத்தப்படற்பாலதான மதிப்பிடப்பட்ட வருமான வரிக் கூற்றானது **உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தலைமை காரியாலயத்தின் மத்திய ஆவண முகாமைத்துவ அலகில் அல்லது ஏதேனும் பிராந்திய அலுவலகத்தில்** நேரடியாக கையளிக்கப்படலாம் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படலாம்.

### 1.2 மதிப்பிடப்பட்ட வரிக் கொடுப்பனவு

- மதிப்பிடப்பட்ட வரியானது காலாண்டுத் தவணைகளில் பின்வரும் காலாண்டுப் பகுதிகளுக்கான குறியீட்டை பிரயோகித்து கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

| வரித் தவணை | கொடுப்பனவுக்கான திகதி | கொடுப்பனவுக் காலத்திற்கான குறியீடு |
|---|---|---|
| முதல் தவணை | 2021 ஆகஸ்ட் 15 | 21221 |
| இரண்டாவது தவணை | 2021 நவம்பர் 15 | 21222 |
| மூன்றாவது தவணை | 2022 பெப்ரவரி 15 | 21223 |
| நான்காவது தவணை | 2022 மே 15 | 21224 |

- **கொடுப்பனவு நறுக்குகள்**

கொடுப்பனவு நறுக்குகள் வரிச்செலுத்துநர்களுக்கு தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவற்றினை உள்நாட்டு இறைவரி தலைமை காரியாலயத்தின் வாடிக்கையாளர் உதவி மற்றும் ஊக்குவிப்பு பிரிவு அல்லது அனைத்து பிராந்திய அலுவலகங்கள் அல்லது ஏதேனும் இலங்கை வங்கிக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

- **கொடுப்பனவுகள் செலுத்தப்படக் கூடிய வங்கி**

இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும்

### 2. மதிப்பிடப்பட்ட வரிக் கூற்றை பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் - 2021/2022



www.ird.gov.lk www.ird.gov.lk www.ird.gov.lk

www.ird.gov.lk www.ird.gov.lk www.ird.gov.lk

**I.** மதிப்பிடப்பட்ட செலுத்தப்படவேண்டிய வரிக் கூற்றின் (10), (20), (30) மற்றும் (40) ஆம் கூடுகளில் ஒவ்வொரு வருமான மூலங்களிலிருந்துமான **மதிப்பிடப்பட்ட வருமானத்** தொகையை வெளிப்படுத்தவும்.

**II.** **கூடு 50 - மதிப்பிடப்பட்ட வரிவிதிப்புக்குரிய வருமானம்**.

அ) ஊழியம், வர்த்தகம், முதலீடு (முதலீட்டு ஆதனங்களின் தேறிப்பெறுகையிலிருந்தான ஈட்டுகை தவிர்த்து) அல்லது ஏனைய வருமான மூலங்களிலிருந்து மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருமானம், ஆள் ஒருவரின் மொத்த மதிப்பிடப்பட்ட வரி விதிப்புக்குரிய வருமானமாகக் காணப்படும்.

ஆ) மதிப்பிடப்பட்ட வரி விதிப்புக்குரிய வருமானத்தைக் கணக்கிடும் போது இறுதி நிறுத்திவைத்தல் கொடுப்பனவுகள் மற்றும் விலக்களிக்கப்பட்ட தொகைகள் உள்ளடக்கப்படுதல் கூடாது.

**III.** **கூடு 60 – மொத்த மதிப்பிடப்பட்ட தகைமையளிக்கும் கொடுப்பனவுகள்**

இந்த வருடத்தின் போது மேற்கொள்ளப்படவுள்ள தகைமையளிக்கும் கொடுப்பனவுகளின் மொத்த தொகையை குறிப்பிடவும் (உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் வலைதளத்தில் உள்ள விரிவான அறிவுறுத்தல்களின் விடய இலக்கம் 2(III) இனை பார்க்கவும்).

**IV.** **கூடு 70 – மொத்த மதிப்பிடப்பட்ட தகைமையளிக்கும் நிவாரணங்கள்**

இந்த வருடத்திற்கு உங்களுக்கு உரித்துடையதான மொத்த மதிப்பிடப்பட்ட நிவாரணத்தை பதியவும். (உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் வலைதளத்தில் உள்ள விரிவான அறிவுறுத்தல்களின் விடய இலக்கம் 2(IV) இனை பார்க்கவும்).

**V.** **கூடு 90 – மதிப்பிடப்பட்ட வரிப் பொறுப்புக்கள்**

மதிப்பிடப்பட்ட வரிப் பொறுப்பானது, ஏற்புடைய வருமான வரி வீதங்களைப் பிரயோகித்து கணிக்கப்படுதல் வேண்டும். அதற்கமைவாக, மதிப்பிடப்பட்ட வருமான வரிக்கூற்றின் (SET) பகுதி II இனை நிரப்பவும். பின்னர் கூடு 90.10 இலுள்ள பெறுமானத்தை கூடு 90 இல் பதியவும். (உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் வலைதளத்தில் உள்ள விரிவான அறிவுறுத்தல்களின் விடய இலக்கம் 2(VI) இனை பார்க்கவும்)

**VI.** **கூடு 100 – மதிப்பிடப்பட்ட வெளிநாட்டு வரி பற்று**

ஏதேனும் வெளிநாட்டு வரி பற்று இருப்பின் அதனை கூடு 100 இல் பதியவும். வெளிநாட்டு வரி வரவு தொடர்புபடும் இலாபம் அல்லது வருமானத்தின் அத்தகைய பகுதிகளின் மீதான வரியின் தொகைக்கு வெளிநாட்டு வரி வரவு மட்டுப்படுத்தப்படும்.

**VII.** **கூடு 110 –மதிப்பிடப்பட்ட முற்பண தனிப்பட்ட வரி (APIT)**

மதிப்பிடப்பட்ட முற்பண தனிப்பட்ட வரிக்கு உட்படும் ஊழிய வருமானத்தை உடைய ஊழியர், மதிப்பிடப்பட்ட முற்பண தனிப்பட்ட வரியினை கூடு 110 இல் பதிதல் வேண்டும்.

**3. வருமான வரியின் காலாண்டு தவணைக் கொடுப்பனவுகளை கணித்தல்**

**I.** காலாண்டு தவணைக் கொடுப்பனவு பின்வரும் சமன்பாட்டை பயன்படுத்தி கணிக்கப்படுதல் வேண்டும்.

காலாண்டு தவணைக் கொடுப்பனவு **(E)** $= \dfrac{A - C}{B}$



www.ird.gov.lk www.ird.gov.lk www.ird.gov.lk

www.ird.gov.lk www.ird.gov.lk www.ird.gov.lk

**A** செலுத்தப்படற்பாலதான மதிப்பிடப்பட்ட வரி (கூடு 120 இல் வெளிப்படுத்தப்பட்ட தொகை)

**B** நடப்பு தவணை உட்பட மீதமுள்ள தவணைகளின் எண்ணிக்கை*

**C** தவணைக்கு முன்னராக மேற்கொள்ளப்பட்ட வரி கொடுப்பனவுகள்(நடப்பு தவணைக் கொடுப்பனவின் கொடுப்பனவுக்கு முன்னர் செலுத்தப்பட்ட/பிடித்துவைக்கப்பட்ட முன்னைய தவணைக் கொடுப்பனவுகள், பிடித்துவைக்கப்பட்ட வரி (WHT), முற்பண வருமான வரி (AIT))

**** நடப்பு தவணை அடங்கலாக கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய தவணைகளின் எண்ணிக்கை – B***

| *தவணை* | *1 ஆவதுt* | *2 ஆவது* | *3 ஆவது* | *4 ஆவது* |
|---|---|---|---|---|
| ***"B"*** | *4* | *3* | *2* | *1* |

**II. தேறிய காலாண்டு தவணைக் கொடுப்பனவை கணித்தல் (E-F)**

**F** - காலாண்டு தவணைக் கொடுப்பனவின் முற்பண கொடுப்பனவு, 2019/2020 ஆம் வரி மதிப்பீட்டாண்டின் பொருளாதார சேவைக் கட்டணத்தின் முன்கொண்டுவரப்பட்ட தொகை அல்லது பங்குடமையால் செலுத்தப்பட்ட தவணைக் கொடுப்பனவின் பங்கு (பங்குடமையின் பங்குதாரர்களுக்கு).

**4. தண்ட ஏற்பாடுகள்**

**4.1 மதிப்பிடப்பட்ட வரிக் கூற்றினை காலம் தாழ்த்தி கோப்பிடல் மற்றும் சமர்ப்பிக்காமை மற்றும் பிழையான அல்லது தவறான மதிப்பிடப்பட்ட வரிக் கூற்றினை சமர்ப்பித்தலுக்கான தண்ட ஏற்பாடுகள்**

- ஆணையாளர் நாயகத்தினால் அறிவுறுத்தப்பட்டவாறு மதிப்பிடப்பட்ட வரிக் கூற்றினை சமர்ப்பிக்க தவறும் நபர் ஒருவர் ஒரு மில்லியன் ரூபாக்கள் வரையில் தண்டம்செலுத்த உட்படுத்தப்படுவார்.
- தவறான மதிப்பிடப்பட்ட வரிக் கூற்றின் காரணமாக குறைவாக வரி செலுத்தப்பட்டிருக்குமிடத்து மற்றும் மதிப்பிடப்பட்ட வரிக் கூற்றில் குறிப்பிடத்தக்க அளவு தவிர்ப்பி காணப்படுமிடத்து, தண்டம் பின்வருமாறு அறவிடப்படும். -
- (அ) ஆ இல்லாதவிடத்து குறைவான கொடுப்பனவில் 25% ;

  அல்லது

  (ஆ) குறைவான கொடுப்பனவானது

  - பத்து மில்லியனைவிட அதிகம் எனில் அல்லது
  - அந்த காலப்குதிக்கான அந்த நபரின் வரிப் பொறுப்பு 25% ஐ விட அதிகம் எனில்

  குறைவான கொடுப்பனவில் 75%

- மதிப்பிடப்பட்ட வரிக் கூற்றுப் படிவமானது வரி உத்தியோகத்தர் ஒருவருக்கு வரிக் கூற்றாக கொள்ளப்பட்டு, அதற்க்கமைவாக, பிழையான அல்லது தவறான கூற்றின் மீது தண்டம் அறவிடப்படும். தண்டமானது, ரூபா ஐம்பதினாயிரத்திற்கு சமமான தொகை அல்லது பிழையான அல்லது தவறான கூற்றின் காரணமாக குறைவான கொடுப்பனவுத் தொகை என்பவற்றுள் கூடிய தொகையாக காணப்படும்.
- வேண்டுமென்றே பிழையான அல்லது தவறான மதிப்பிடப்பட்ட வரிக் கூற்றினை மேற்கொள்ளும் நபர், குற்றத் தீர்ப்பின் மீது ஒரு மில்லியன் வரையிலான தண்டம்



www.ird.gov.lk www.ird.gov.lk www.ird.gov.lk

www.ird.gov.lk www.ird.gov.lk www.ird.gov.lk

அல்லது ஒரு வருடக் காலப்பகுதிக்கு சிறைத் தண்டனை அல்லது இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

### 4.2 தவணைக் கொடுப்பனவுகளை செலுத்தாமை/பிந்திய செலுத்துகை/ குறைவாக செலுத்துதல் மற்றும் தவணைக் கொடுப்பனவை தவிர்த்தல் என்பவற்றில் பிரயோகிக்கத்தக்க தண்ட ஏற்பாடுகள்

- **கொடுப்பனவுகளை செலுத்தாமை/பிந்திய செலுத்துகை அல்லது குறைவாக செலுத்துதல் என்பவற்றுக்கான தண்டம்**

  இச் சட்டத்தின் கீழ், தவணைக் கொடுப்பனவைச் செலுத்த வேண்டிய திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் தவணைக் கொடுப்பனவை அல்லது அதன் ஒரு பகுதியைச் செலுத்துவதற்குத் தவறும் எவரேனும் ஆளொருவர் மீது, செலுத்த வேண்டிய எனினும் செலுத்தியிராத வரிக்கொடுப்பனவில் 10% தண்டமாக விதிக்கப்படும்.

- **தவணைக் கொடுப்பனவுகளை தவிர்த்தல்**

  மதிப்பிடப்பட்ட வரிக் கூற்றில் செலுத்தப்படவேண்டிய மதிப்பிடப்பட்ட வரியினை குறைவாக குறிப்பிடுவதன் மூலம் வேண்டுமென்றே வரித் தவணையொன்றை அல்லது ஒரு பகுதியினைத் தட்டிக் கழிக்கும் நபர் குற்றத்தீர்ப்பின் மீது பத்து மில்லியன் ரூபாக்கள் வரையிலான குற்றப்பணம் அல்லது இரண்டு வருட காலத்திற்கான சிறைத் தண்டனை அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் சிறை தண்டனை இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

- **குறைவான கொடுப்பனவு மீதான வட்டி**

  செலுத்தப்பட வேண்டிய தினத்தில் தவணைக் கொடுப்பனவு அல்லது அதன் பகுதி ஒன்று செலுத்தப்படாதவிடத்து, அத்தகைய தவறுகையில் உள்ள தவணைக் கொடுப்பனவு அல்லது அதன் பகுதிக்கு மாதம் ஒன்றுக்கு அல்லது மாதம் ஒன்றின் பகுதிக்கு **1.5% வட்டி** அறவிடப்படும்.

## 5. மேலதிக அறிவுறுத்தல்கள்

மேலதிக விவரங்களுக்கு, www.ird.gov.lk என்ற வலைதளத்தின் ஊடக பதிவிறக்கம் செய்யப்படக் கூடிய “செலுத்தப்படற்பாலதான மதிப்பிடப்பட்ட வரிக் கூற்றுக்கான விரிவான அறிவுறுத்தலை” பார்க்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு பின்வருவோரை தொடர்புகொள்ளவும்**;

1. 1944 – உள்நாட்டு இறைவரி அழைப்பு நிலையம்.
2. 011-2134200 – சிரேஷ்ட ஆணையாளர் – வியாபார ஆலோசனை பிரிவு
3. 011-2134250 – ஆணையாளர் – வாடிக்கையாளர் சேவை மற்றும் ஊக்குவிப்பு பிரிவு
4. 011-2134251 – ஆணையாளர் – வியாபார ஆலோசனை பிரிவு
5. அனைத்து பிராந்திய மற்றும் நகர அலகுகளின் ஆணையாளர்கள்



www.ird.gov.lk www.ird.gov.lk www.ird.gov.lk